Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

நகர் ஊரமைப்புத்துறை
திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமம்.
உறுப்பினர் செயலர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் திரு.ச.செல்வராஜ், டி.சி.இ.,

ந.க.எண்.3176/2020/தி.மா.2 நாள்.15.06.2021.

பொருள் : மனை உட்பிரிவு - திண்டுக்கல் உள்ளூர் திட்டக் குழுமம் - திண்டுக்கல் மாவட்டம் - மேற்கு வட்டம் - செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி/ கிராமம் - சர்வே எண்கள்.292/13B3A-ல் 1699.67ச.மீ (0.42 ஏக்கர்) பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை :
1) மனுதாரர் திருமதி.S.சுஜாதா விண்ணப்பம் நாள்.21.12.2020
2) அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-31.01.2020.
3) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-4367/2017பிஏ-2, நாள்-06.11.2019 மற்றும் 05.02.2020.
4) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்-13686/2017எல்ஏ-2, நாள்-08.09.2017.
5) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-12201/2017சிபி, நாள்-28.09.2017.
6) உறுப்பினர் செயலர், திண்டுக்கல் உள்ளூர் திட்டக் குழுமம் கடிதம் ந.க.எண்.3176/2020/தி.மா.2, நாள்.17.02.2021
7) அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சி துறை, நாள்.16.06.2003
8) மனுதாரர் திருமதி.S.சுஜாதா என்பவரது கடிதம் மற்றும் கட்டணங்கள் செலுத்தப்பட்டு இணைப்புகள் பெறப்பட்ட நாள்.03.05.2021 மற்றும் 04.05.2021
9) அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.09.12.2020.

*****

உத்தரவு

திண்டுக்கல் மாவட்டம், மேற்கு வட்டம், செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி/ கிராமம், சர்வே எண்கள்.292/13B3A-ல் 1699.67ச.மீ (0.42 ஏக்கர்) பரப்பளவுள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/திஉ திகுஎண்.16/2021 என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப அனுமதியும், மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் பிரிவு 49-ன்கீழ் மற்றும் பார்வையில் கண்ட அரசாணையின்,

விதி(4)-ன்படியும் திட்ட அனுமதி எண்.16/2021 என எண்ணிடப்பட்டு, கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி திட்ட அனுமதியும் வழங்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள் :-

1) நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகைப் பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.

2) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

3) பார்வையில் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி, "உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலைப் பகுதிகளை மனுதாரர் சொந்த செலவில் வருவாய் உட்பிரிவு செய்து, அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே, உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்".

4) பார்வையில் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி, "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department, Dated.22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, Market, Book, Sell or offer for Sale, or Invite persons to purchase in any manner any plot, apartment or Building, as the case may be in any Real Estate Project or Part of it only after Registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority".

5) தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்-2019, விதி எண்.47(II)-ன்படி, மனைப்பிரிவில் தேவைப்படும் சாலை, குடிநீர் வசதி, வடிகால் வசதி, கழிவு நீர் வசதி மற்றும் மின்சார வசதிகளை ஏற்படுத்துதல் / மேம்படுத்துதலுக்காக உள்ளாட்சி மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மதிப்பீடு செய்யப்படும் செலவுத் தொகையினை மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

6) நில உரிமை குறித்து உள்ளாட்சியால் வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

87

பார்வை 10-ல் கண்ட அரசாணையின்படி மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட பார்வை-7 மற்றும் 8-ல் கண்ட தான ஆவணத்தின்படி அசல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளவாறு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்படி சிறப்பு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

உள்ளாட்சியால் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உரிமம் வழங்கிய பின்னர், அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான மறுதபாலில் ஒப்புகைச் சான்று அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

15/6/21

உறுப்பினர் செயலர்,
திண்டுக்கல் உள்ளூர் திட்டக் குழுமம்,
திண்டுக்கல்.

15/6/2021

இணைப்பு

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்கள் -2
மனைப்பிரிவு நிபந்தனைகள்-2.

பெறுநர்

தலைவர்,
செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி / ஊராட்சி ஒன்றியம்,
மேற்கு வட்டார்,
திண்டுக்கல் மாவட்டம்.

நகல் : (உள்ளாட்சி மூலம்)

1. திருமதி.S.சுஜாதா,
W/o.M.ஸ்ரீதர்,
81, முனிசிபல் காலனி, நேருஜி நகர்,
திண்டுக்கல் - 624 001.

2. தொழில்நுட்ப வைப்பறைக்கு-1 நகல்.

செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திருமதி.க.லதா.,M.Com.,B.Ed.,M.Phil.,

ந.க.எண்: 15/ 2021 / செ.ஊ   நாள்: 25.03.2022

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் - அரசு சட்ட விதிமுறைகளின் படி அரசு தலைப்பில் கட்டணங்களை செலுத்த உத்திரவிடுதல் - சார்பாக.

பார்வை:
1. அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1) துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1) துறை, நாள்: 31.01.2020.
2. மனுதாரர் திருமதி S.சுஜாதா, திண்டுக்கல். என்பவரது இணையதள விண்ணப்ப நாள்:21.12.2020.
3. உறுப்பினர் செயலர், திண்டுக்கல் உள்ளூர் திட்ட குழுமம் அவர்களது செயல்முறை ஆணை ந.க.எண்: 3176/2020/தி.மா.2. நாள்:15.06.2021. (ம.வ/திஉதிகு எண்- 16/2021)

* * * *

உத்திரவு

திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம் செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி /கிராமம் சர்வே எண்:292/13B3A-ல் உள்ள 1699.67 ச.மீ (0.42 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி, அரசாணை பார்வை-1-ன் படி, பார்வை-3-ல் காணும் கடிதத்தின் மூலம் உத்திரவிட்டுள்ளார். இந்த உத்திரவினை ஏற்று மனைப்பிரிவிற்கான அபிவிருத்திக் கட்டணத்தை கீழ்காண்ட விபரப்படி ஊராட்சியில் செலுத்தும்மாறு தெரிவிக்கப்படுகிறது.

வ.எண்	பரப்பளவு (ச.மீ)	அபிவிருத்திக் கட்டணம் (ரூ)	ஆய்வுக்கட்டணம் (ரூ)	மொத்தம் (ரூ)
1	1700	85000	1000	86000

தலைவர்
செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி,
திண்டுக்கல்.

பெறுநர்:

திருமதி S.சுஜாதா,
க/பெ M.ஸ்ரீதர்,
81,முனிசிபல் காலனி, நேருஜி நகர்,
திண்டுக்கல்.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate